மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நன்றி சொல்லி இருக்கிறேன், அதிலே என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை. நான் சொல்லியிருக்கிறதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டரே வராது. இது எப்போதும் கடைசியாக அவையை முடித்து வைக்கிறபோது நான் சொல்வது தான். மாண்புமிகு பேரவை முன்னவர். (குறுக்கீடுகள்)இல்லை, வேண்டாம். உட்காருங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: ஆன் ஏ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். ஒரு சிறிய விளக்கம். கொஞ்சம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வராது. (குறுக்கீடு).

(திரு. சோ. பாலகிருஷ்ணன் அவையைவிட்டு வெளியேறினார்)

2. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்'' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை. என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-37க்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.